RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-23 | 23 ஜனவரி | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ‘மகள்களை காப்போம்; மகள்களை படிக்க வைப்போம்’ இயக்கத்தின் வெற்றி

### பிரதமர் பெருமைப்பட்டுக்கொள்ளும் பிரதமர்



புதுடெல்லி, ஜன.23

‘மகள்களைக் காப்போம்; மகள்களைப்படிக்கவைப்போம்’ எனும் மத்திய அரசின் முயற்சி, பாலின சார்புகளை முறியடிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளதாகவும், அனைத்து தரப்புமக்களின்பங்களிப்பையும் ஈர்த்துள்ளதாகவும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.


‘மகள்களைக் காப்போம்; மகள்களைப் படிக்க வைப்போம்’ (ஙிமீமீ’வீ ஙிணீநீலீணீஷீ ஙிமீமீ’வீ றிணீபீலீணீஷீ) இயக்கம் தொடங்கப்பட்டு இன்றுடன் 10 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவுகளில், “‘மகள்களைக் காப்போம்;மகள்களைப் படிக்க வைப்போம்’ இயக்கம் 10 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும், மக்கள் இயக்க முயற்சியாக மாறியுள்ளது. அதோடு, அனைத்து தரப்பு மக்களின் பங்கேற்பையும் ஈர்த்துள்ளது.

‘மகள்களைக் காப்போம்; மகள்களைப் படிக்க வைப்போம்’ முயற்சி, பாலின சார்புகளை முறியடிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. அதே நேரத்தில் பெண் குழந்தை கல்வி பெறுவதற்கும், அவர்கள் தங்களின் கனவுகளை அடைவதற்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்கான சரியான சூழலை உருவாக்கியுள்ளது.

இதற்காக அர்ப்பணிப்புடன் முயற்சிகளை மேற்கொண்ட பொதுமக்களுக்கும், பல்வேறு சமூகசேவை அமைப்புகளுக்கும் நன்றி. ‘மகள்களைக் காப்போம்; மகள்களைப் படிக்க வைப்போம்’ இயக்கம், குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைந்துள்ளது. நீண்ட பல ஆண்டுகளாக குறைவான பெண் குழந்தை விகிதங்களைக் கொண்ட மாவட்டங்கள், குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைப் பதிவு செய்துள்ளன. மேலும், பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய ஆழமான உணர்வை விழிப்புணர்வு பிரச்சாரங்கள் விதைத்துள்ளன.

இந்த இயக்கத்தை அடிமட்ட மட்டத்தில் துடிப்பானதாக மாற்றிய அனைத்து தரப்பினரையும் நான் பாராட்டுகிறேன். நமது மகள்களின் உரிமைகளைப்பாதுகாப்பதைத் தொடர்ந்து, அவர்களின் கல்வியை உறுதிசெய்து, அவர்கள் எந்த பாகுபாடும் இல்லாமல் செழிக்கக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்குவோம். வரும் ஆண்டுகள் இந்தியாவின் மகள்களுக்கு இன்னும் பெரிய முன்னேற்றத்தையும் வாய்ப்பையும் கொண்டு வருவதை ஒன்றாக உறுதி செய்வோம்.” என தெரிவித்துள்ளார்.

## ஒரு பவுன் ரூ.60,000ஐ கடந்தது தங்கம் விலை வரலாறு காணாத புதிய உச்சம்



சென்னை, ஜன.23

தங்கம் விலை வரலாறு காணாத புதிய உச்சத்தைக் கண்டுள்ளது. இன்று (ஜன.22) காலை நிலவரப்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.600 உயர்ந்து ஒரு பவுன் ரூ.60 ஆயிரத்து 200க்கு விற்கப்படுகிறது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கத்தின் விலையில் அவ்வப்போது மாற்றம் ஏற்பட்டு உயர்ந்தும், குறைந்தும் விற்பனையாகி வருகிறது.

அதன்படி இன்று காலை, 22 கேரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.75 உயர்ந்து ஒரு கிராம் ரூ.7,525ம், பவுனுக்கு ரூ.600 உயர்ந்து ஒரு பவுன் ரூ.60,200க்கும் விற்கப்படுகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.104க்கு விற்கப்படுகிறது. நேற்று தங்கம் ஒரு பவுன் ரூ.59,600க்கும் விற்பனையான நிலையில் இன்று பவுன் ரூ.60 ஆயிரத்தைக் கடந்து புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது. இது நகை வாங்குவோர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விலை உயர்வுக்குக் காரணம் என்ன? தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வந்தாலும் கூட தங்கம் விலை ஒரு புதிய மைல்கல்லாக அதிகரித்துள்ளது. இதற்கான காரணங்கள் பல உள்ளன. உள்நாட்டைப் பொருத்தவரை இந்திய ரூபாயின் மதிப்பு கடந்து 3 நாட்கள் சிறிய ஏற்றம் கண்டுள்ளதும், பண்டிகை காலம், திருமணம் சீசன் ஆகியனவற்றால் தேவை அதிகரித்துள்ளதாலும் தங்கம் விலை உயர்ந்துள்ளது.

சர்வதேச அளவில் பார்க்கும் போது, அண்மையில் அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றார். எதிர்பார்த்தபடியே அவர் அதிபராகப் பதவியேற்றதும் பல அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். அதில் ஒன்றுதான் இறக்குமதி வரிவிதிப்பு. அண்டை நாடுகளுக்கு இறக்குமதி வரியை அதிகரித்ததோடு மட்டுமல்லாது இந்தியா உள்ளிட்ட ப்ரிக்ஸ் நாடுகளுக்கும் 100 சதவீதம் வரி விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனால் முதலீட்டார்கள் தங்கத்தை பாதுகாப்பான முதலீடாகக் கருதி அதன் மீதான முதலீட்டை அதிகரிப்பதாலும் தங்கம் விலை உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மந்தநிலை, போர்ப் பதற்றங்கள் உள்ளிட்ட காரணங்களால் தங்கம் விலையில் ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும் கூட நீண்ட கால அடிப்படையில் பார்க்கும் போது அடுத்த இரண்டு ஆண்டுகளில் தங்கம் விலை பல மடங்கு உயரும் என துறை சார் நிபுணர்கள் கூறுகின்றன.

## வள்ளலார் பெருவெளியில் சர்வதேச மையம் அமைப்பதை திமுக அரசு கைவிட வேண்டும்: அண்ணாமலை



சென்னை, ஜன.23

வடலூர் வள்ளலார் சத்திய ஞான சபை பெருவெளியில் சர்வதேச ஆய்வு மையக் கட்டிடங்கள் கட்டுவதை திமுக அரசு கைவிட வேண்டும் என்று பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “வடலூர் வள்ளலார் சத்திய ஞான சபைப் பெருவெளியில், சர்வதேச ஆய்வு மையக் கட்டிடங்கள் கட்டத் தடை விதித்து, உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளதை, தமிழ்நாடு பாஜக சார்பாக வரவேற்கிறோம்.

கடந்த ஆண்டு, வடலூர் சத்திய ஞானசபைப் பெருவெளியில் சர்வதேச மையம் கட்ட, திமுக அரசு முயற்சிகள் மேற்கொண்டது. இது, வள்ளலாரின் பெருவெளி மெய்யியலுக்கு எதிரான செயல் என்று வள்ளலார் பக்தர்கள், பாஜக உள்ளிட்ட பல அமைப்புகள், கண்டனங்கள் தெரிவித்ததோடு போராட்டங்களையும் முன்னெடுத்தனர்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் பாஜக ஆன்மீக மற்றும் ஆலய மேம்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த சகோதரர் வினோத் ராகவேந்திரா தொடர்ந்த வழக்கில், சர்வதேச மையக் கட்டிடங்கள் கட்ட, சென்னை உயர் நீதி மன்றம் இடைக்காலத் தடை விதித்தது. இந்தத் தடை நிலுவையில் இருக்கும்போதே, சத்திய ஞானசபைக்குச் சற்றுத் தள்ளி உள்ள பகுதியில், சர்வதேச மையக் கட்டிடங்கள் கட்டத் தொடங்கியது தமிழ்நாடு அரசு.

இந்த அத்துமீறலை எதிர்த்தும், கட்டுமானப் பணிகளுக்குத் தடை கோரியும் சகோதரர் வினோத் ராகவேந்திரா, உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், வள்ளலார் சர்வதேச ஆய்வு மையக் கட்டிடங்கள் கட்டுவதற்கு இடைக்காலத் தடை விதித்தும், புதிய கட்டுமானங்கள் எழுப்ப, சென்னை உயர் நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை தொடரும் என்றும் கூறி, உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

வள்ளலார் பெருமானின் பக்தர்களுக்கு, மிகுந்த ஆறுதலாக அமைந்துள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, பொதுமக்கள் வழிபாட்டு முறையைச் சிதைக்க முயன்ற திமுக அரசுக்கு விழுந்த சம்மட்டி அடியாக அமைந்துள்ளது. திமுக அரசு, பக்தர்களை மேலும் காயப்படுத்தாமல், சர்வதேச மையக் கட்டுமானங்களை, வள்ளலார் பெருவெளியில் கட்டுவதைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீமான் வீடு முற்றுகை… கையில் தடிகளுடன் நாதக தொண்டர்கள்!




சென்னை, ஜன.23

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வீட்டை பெரியாரிஸ்டுகள் முற்றுகையிட்டுள்ளனர். சென்னை நீலாங்கரையில் முற்றுகையிட உள்ள பெரியாரிஸ்டுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க சீமான் வீடு முன்பாக அவரது ஆதரவாளர்கள் மற்றும் ஏராளமான நாம் தமிழர் கட்சியினர் இரவு முதலே குவிந்துள்ளனர். தந்தை பெரியார் குறித்து சில நாட்களாக சீமான் தொடர்ந்து அவதூறாகவும் ஆதாரம் இல்லாமலும் பேசி வருவதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சீமான், “தந்தை பெரியார் தாய் மொழியை சனியன் என்று கூறினார். வள்ளலாரை விட பெரியார் என்ன புரட்சி செய்து விட்டார்; தாய் மகளுடன் உறவு வைத்துக் கொள்ள சொன்னவர் தான் பெரியார் அவரா பெண்ணுரிமைக்கு போராடியவர் அம்பேத்கரும் பெரியாரும் எந்த புள்ளியில் ஒன்றாக இணைகிறார்கள்?” என்றெல்லாம் அடுத்தடுத்து சீமான் சர்ச்சையான கருத்துக்களை பேசியிருந்தார். சீமானின் இந்தப் பேச்சுக்கு பெரியார் உணர்வாளர்கள் ஆதாரங்கள் கேட்ட போது, பெரியார் புத்தகங்களை நாட்டுடைமையாக்கினால் அதில் கிடைக்கும் என அலட்சியமாக பதில் கூறியதால் சீமானுக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அப்போது, சமூகத்தில் பதற்றத்தை உருவாக்கும் வகையில் சீமான் பேசியதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதுமட்டுமின்றி தமிழ்நாடு முழுவதும் 100க்கும் மேற்பட்ட காவல் நிலையங்களில் சீமான் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் தந்தை பெரியாரை இழிவுபடுத்தி பேசிய சீமான் வீடு இன்று தந்தை பெரியார் திக. மே 17 இயக்கம், திராவிடர் விடுதலைக் கழகம் உட்பட 30க்கும் மேற்பட்ட பெரியாரிய உணர்வாளர்கள் அமைப்பு அறிவித்தது. இது குறித்த சுவரொட்டிகள் சென்னை மாநகர் மற்றும் நீலாங்கரையில் உள்ள சீமான் வீடு முன்பாக ஒட்டப்பட்டன. இந்த நிலையில் சீமான் வீட்டுக்கு பாதுகாப்பு தரும் வகையில் நாம் தமிழர் கட்சியின் நிர்வாகிகள் நேற்று இரவு முதலே அவரது வீடு முன்பாக குவிந்து வருகின்றனர். முற்றுகை போராட்டத்தையடுத்து சீமான் “என்னுடைய கருத்து தவறு என்றால் பெரியார் கருத்தும் தவறுதான் 15 ஆண்டுகளுக்கு பின் தற்போது பிரபாகரன் புகைப்படம் குறித்து பேசுவது ஏன்? 15 ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?, பிரபாகரனா? பெரியாரா? என மோதி பார்ப்பது என்று ஆகி விட்டது” என சீமான் பேட்டி அளித்துள்ளார். சீமான் வீட்டை முற்றுகையிட வரும் பெரியாரிஸ்டுகளுக்கு நாம் தமிழர் கட்சியினர் ‘விருந்து’ வைக்க தயாராக இருக்கிறோம்; வந்து முற்றுகையிடுங்கள் என பதிலடி தரப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் சீமான் வீட்டில் 220 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். சீமான் வீட்டு முன்பாக குவிந்துள்ள நா.த கொண்டர்களுக்கு சுடசுட உணவு பரிமாறப்பட்டு வருகிறது. காலை உணவாக இட்லி, பொங்கல், வடை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதே போல் மதிய உணவாக பிரியாணியும் அசைவ உணவுகளும் தயாராகி வருகின்றன. சண்டை போட்டு விட்டு சாப்பிடலாம் என்று நினைத்தோம் சாப்பிட்டு விட்டு தற்போது சண்டை போடலாம் என முடிவு எடுத்துள்ளோம்“ என நாதகவினர் கூறிவருகின்றனர்.

## வேட்புமனு ஏற்பில் குளறுபடி ஈரோடு கிழக்கு தேர்தல் அலுவலர் மாற்றம்



ஈரோடு, ஜன.23

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில், பெங்களூருவைச் சேர்ந்த சுயேச்சை வேட்பாளர் பத்மாவதியின் வேட்புமனு ஏற்கப்பட்ட குளறுபடி காரணமாக, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் அலுவலர் மணீஷ் அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக, ஓசூர் மாநக ராட்சி ஆணையர் ஸ்ரீகாந்த் தேர்தல் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலின் வாக்குப்பதிவு பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இத்தேர்தலில் போட்டியிட திமுக வேட்பாளர் சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி உள்பட 58 வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்னர். இதில், 3 வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு, 55 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலை இருந்தது.

இதில் ஏழு சுயேச்சை வேட்பாளர்கள் மற்றும் ஒரு பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சியின் மாற்று வேட்பாளர் என மொத்தம் எட்டு வேட்பாளர்கள் வேட்புமனுக்களை திரும்ப பெற்றனர். இதன்தன்படி, ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் திமுக மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் உள்பட 47 வேட்பாளர்கள் போட்டியிட உள்ளதாக ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷ் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கும் பணி நடந்தபோது, கர்நாடக மாநிலம் பெங்களூரு, கே.ஆர்.புரம் சட்ட சபைத் தொகுதியைச் சேர்ந்த வி.பத்மாவதி என்ற சுயேச்சை வேட்பாளரின் மனு ஏற்கப்பட்டதற்கு, சுயேச்சை வேட்பாளர்கள் நூர் முகமது, அக்னி ஆழ்வார், பத்மராஜன் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தல் ஆணைய விதிமுறைகளின்படி, மக்களவை மற்றும் மாநிலங்களவைக்கு எந்த மாநிலத்தில் இருந்தும் வேட்பாளராக போட்டியிடலாம். ஆனால், சட்டப்பேரவைத் தொகுதிக்கு அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் மட்டுமே போட்டியிட முடியும் என போராட்டத்தில் ஈடுபட்ட சுயேச்சை வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜகோபால் சுன்கரா விசாரணை மேற்கொண்டார். தமிழக தலைமை தேர்தல் அதிகாரி உள்ளிட்டோருடன் அவர் ஆலோசனை மேற்கொண்ட நிலையில், நேற்று முன் தினம் நள்ளிரவு பத்மாவதியின் வேட்புமனு தள்ளுபடி செய்வதாக அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் எண்ணிக்கை 46 ஆக குறைந்தது.

தேர்தல் அலுவலர் மாற்றம்: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் நடத்தும் அலுவலராக, மாநகராட்சி ஆணையர் என்.மணீஷ் நியமிக்கப்பட்டு இருந்தார். வேட்புமனு தாக்கல், பரிசீலனை உள்ளிட்ட இடைத் தேர்தல் தொடர்பான அனைத்து பணிகளும் இவரது உத்தரவின் பேரில் நடைபெற்று வந்தன. இந்நிலையில், பெங்களூருவைச் சேர்ந்த வேட்பாளர் பத்மாவதியின் வேட்புமனுவை, விதிகளுக்கு மாறாக ஏற்றதன் மூலம் தவறு நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டு, அவரது மனு கடைசிநேரத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த நிலையில் இந்த குளறுபடி காரணமாக, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் என்.மணீஷ் அதிரடியாக மாற்றப்பட்டார். அவருக்கு மாற்று பணியிடம் ஒதுக்கப்படவில்லை. அதே நேரத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சி ஆணையர் ஸ்ரீகாந்த், ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் தொடர்பான பணிகளை புதிய ஆணையர் ஸ்ரீகாந்த் மேற்கொள்வார்.

## இலங்கை சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 41 பேர் தாயகம் திரும்பினர்



ராமேசுவரம், ஜன.23

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் 41 பேர் புதன்கிழமை காலை தாயகம் திரும்பினர்.

ராமேசுவரம் அருகே பாம்பன் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற அலெக்ஸ், ரஞ்சன், சார்லஸ், சூசை மார்டின் ஆகியோருக்கு சொந்தமான நான்கு நாட்டுப் படகுகளை கைப்பற்றி அதிலிருந்த 35 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கடந்த ஆகஸ்ட் 8ம் தேதி கைது செய்தனர்.

செப். 18ம் தேதி புத்தளம் நீதிமன்றம் 35 மீனவர்களுக்கு 06 மாதம் சிறை தண்டனையும், அபராதமும் விதித்து கொழும்பு வெளிக்கடை சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். கடந்த மாதம் இலங்கை அதிபர் அநுர குமார திசாநாயக்க இந்திய வருகையின் போது பிரதமர் நரேந்திர மோடி இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினைகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

அதனடிப்படையில் இலங்கை நீதிமன்றங்களால் அபராதம் மற்றும் சிறை தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழக மீனவர்களை விடுதலை செய்ய இலங்கை தரப்பில் ஒத்துக்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் இந்த பாம்பன் நாட்டுப்படகு மீனவர்கள் 35 பேர் அபராதம் ரத்து செய்யப்பட்டு, தண்டனை காலம் நிறைவடையும் முன்னரே விடுதலை செய்யப்பட்டனர்.

மேலும் கடந்த ஜனவரி 15ம் தேதி ஊர்காவல்துறை நீதிமன்றம் மூலம் விடுதலை செய்யப்பட்ட மண்டபம் விசைப்படகு மீனவர்கள் 6 பேர், இந்த பாம்பன் நாட்டுப்படகு மீனவர்கள் 35 பேர் என மொத்தம் 41 மீனவர்களும் கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு செவ்வாய்கிழமை இரவு சென்னை வந்தடைந்தனர். அங்கிருந்து மீனவர்கள், மீன்வளத்துறை அதிகாரிகள் தனி வாகனங்கள் மூலம் பாம்பன் மற்றும் மண்டபத்திற்கு புதன்கிழமை காலை அழைத்து வரப்பட்டனர்.

## கீழக்கோட்டையில் பொங்கல் விழா கொண்டாட்டம்





காளையார் கோவில் ஜன23

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் யாவரும் கேளிர் திட்டத்திலுள்ள அணிகளுக்கிடையே பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி வரவேற்புரையாற்றினார். யாவரும் கேளிர் திட்டத்தின் மூலம் பிரிக்கப்பட்டுள்ள இளம் சிவப்பு பழுப்பு ஊதா வான நீல நிற அணியினர்கள் தனித்தனியாகவும் பள்ளி மேலாண்மை குழு சார்பாக பள்ளியளவிலும் பொங்கல் விழா நடைபெற்றது. பழுப்பு நிற அணியினரின் பொங்கல் பானை முதலில் பொங்கி முதல் பரிசை வென்றது. ஊதா நிற அணியினர் சுவை மிகுந்த பொங்கலைச் செய்து முதல் பரிசை பெற்றனர். வான நீல நிற அணியினர் அழகான கோலத்தை இட்டு முதல் பரிசை பெற்றனர். ஆண்களுக்கான மற்றும் பெண்களுக்கான அதிர்ஷ்டம் யாருக்கு போட்டியில் ஊதா அணியினர் முதல் பரிசை பெற்றனர். போட்டிகள் நடத்தப்பட்டு அனைவருக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன. மாட்டிற்கு துண்டு மற்றும் மாலை அணிவிக்கப்பட்டு சிறப்பு செய்யப்பட்டது. கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். ஆசிரியர்கள் ராஜபாண்டி வாசுகி அமலா பால் சத்துணவு உதவியாளர் அஞ்சலை காலை உணவு சமையலர் பஞ்சவர்ணம் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவி சத்யா கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் சங்கம் சார்பாக தங்களது கோரிக்கையில் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்




சிவகங்கை, ஜன.23

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக வட்ட செயலாளர். யூசுப் அவர்கள் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் இன்னாசி ராஜா வட்டத் தலைவர் கருப்புசாமி மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தாலுகா செயலாளர் எஸ் சந்தியாகு மாவட்ட குழு உறுப் பினர் எஸ் ராஜு மாவட்ட குழு உறுப்பினர் தோழர் கே அழகர்சாமி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

நூற்றுக்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

தற்போது அனைவரும் கைது செய்யப்பட்டு இளையான் குடி எம் எம் மகாலில் வைக்கப் பட்டுள்ளனர்.

முதலமைச்சர் ஸ்டாலின் இன்று சிவகங்கை வரும் சமயத்தில், மாற்றுத் திறனாளிகள் போராட்டம் மற்றும் கைது சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஈரோட்டில் நடந்த காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



ஈரோடு ஜன 23

டெல்லியில் காங்கிரஸ் கட்சி தலைமை அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொண்டே ராகுல் காந்தி பேசினார் இதை யொட்டி அசாம் மாநிலம் கவுகாத்தி அருகே உள்ள போலீஸ் நிலையத்தில் ராகுல் காந்தி மீது வழக்கு போடப்பட்டு உள்ளது. இதை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஈரோடு சூரம்பட்டியில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஈரோடு மாநகர மாவட்ட தலைவர் திருச்செல்வம் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தை தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் செல்வ பெருந்தகை தொடங்கி வைத்து பேசினார் அப்போது அவர் கூறியதாவது

ராகுல் காந்தி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது ஜனநாயகத்தை மலரச் செய்த இந்திரா காந்தி குடும்பத்தைச் சேர்ந்தவர் மீது பொய் வழக்கை பாரதீய ஜனதா கட்சியும் ஆர்எஸ்எஸ் சும் போட்டுள்ளது கண்டிக்கத்தக்கது அதை அனுமதிக்க மாட்டோம் .

இந்தியா மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக ராகுல் காந்தி திகழ்கிறார். நாட்டில் நடக்கும் அநீதியை அவர் தட்டிகேட்கிறார்.

இதனால் அவர் மீது பொய் வழக்கு போடுவதின் மூலம் அவரை யாரும் மிரட்ட முடியாது இந்த மிரட்டலுக்கெல்லாம் அவர் பயப்படாமல் நாட்டு மக்களுக்காக இன்னும் வலிமையாக பேசுவார் எனவே உங்களது மிரட்டல் எடுபடாது கோமியம் குடிப்பவர்களுக்கே இவ்வளவு தைரியம் இருந்தால் தேசத்தை காப்பாற்றி நாட்டு விடுதலைக்காக பாடுபட்டவர்களுக்கு எவ்வளவு தைரியம் இருக்கும் எனவே ராகுல் காந்தி மீது போடப்பட்ட பொய் வழக்கை வாபஸ் பெற வேண்டும் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் இல்லாவிட்டால் காங்கிரஸ் கட்சி சார்பில் தமிழ்நாடு முழுவதும் தொடர்ந்து போராட்டம் நடத்தப் படும் இவ்வாறு அவர் பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன .

ஆர்ப்பாட்டத்தில் தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் தங்க பாலு மற்றும் எம் எல் ஏ க்கள் மாநில நிர்வாகிகள் ஈரோடு மாநகர மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, திருவலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பார்வையிட்டு ஆய்வு செய்து, பள்ளியில் பயிலும் அனைத்து மாணவியர்களுக்கும், ஒழுக்கம், தேர்வு முறைகள் குறித்து அறிவுரைகள் வழங்கி சிறப்புரையாற்றி, அரையாண்டுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவியர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

## மதுரை தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் 100வது ஆண்டு நிறைவு விழா



மதுரை, ஜன.23

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரையில் நடைபெற்ற மதுரை தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் 100வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் விக்கிரமராஜா அவர்கள் எந்த நிகழ்ச்சிக்கு அழைத்தாலும் அதை தட்டாமல், கட்டாயமாக கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை நான் பெறுவதுண்டு. ஏனென்றால், விக்கிரமராஜா அவர்கள் ஒரு சங்கத்தின் தலைவர் மட்டுமல்ல, வணிகர்களின் நலனுக்காக செயல்படுகின்ற ஒரு தோழர் மட்டுமல்ல; இந்தப் பொறுப்புகளை எல்லாம் கடந்து, நம்முடைய திராவிட மாடல் அரசின் நல்லெண்ணத் தூதுவராக செயல்பட்டு கொண்டிருப்பவர்.

ஏற்கனவே, தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் பவள விழாவில், இங்கே உரையாற்றிய நம்முடைய ஜெகதீசன் அவர்கள் குறிப்பிட்டது போல, இதே மதுரையில் அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டார். அவரே சொன்னார், தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த ஆண்டும், இந்த அமைப்பு உருவான ஆண்டும் ஒரே ஆண்டுதான். அவருடைய நூற்றாண்டில், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கமும் நூற்றாண்டு நிறைவு விழா காண்பது அதற்காக நான் முதலில் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், வணிகர்களுக்கு ஆதரவாக, உங்கள் நலனுக்காக செய்து வரக்கூடிய பணிகள் எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதேபோல், நம்முடைய அரசின் முயற்சிகளுக்கெல்லாம் துணையாக இருக்கும் அமைப்பாக நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் ஆற்றி வரக்கூடிய பணிகள் எல்லாம் பாராட்டுக்குரியது.

5 ஆயிரத்து 500 உறுப்பினர்கள், 250 இணைப்புச் சங்கங்கள் என்று இந்தியாவிலேயே பெரிய வணிகர் அமைப்பாக இருக்கும் நீங்கள், வணிகர் நலனுக்காகவும், சமுதாய நலனுக்காகவும் மிகவும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

சமச்சீரான, எல்லாருக்கும் எல்லாம் என்ற அடிப்படையிலான நம்முடைய அரசின் பயணத்தில், வணிகப் பெருமக்களான உங்களுடைய ஆதரவு மிக மிக முக்கியம். எங்கள் முயற்சிகளுக்கு எப்போதும் நீங்கள் துணையாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மிகவும் இருக்கிறது. அதேபோல், உங்களின் வளர்ச்சிக்கும் நம்முடைய அரசு எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நீண்ட நேரம் பேசுவதற்கு வாய்ப்பில்லாத காரணத்தால் நான் உடனடியாக விமானத்தை பிடித்து சென்னைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு விக்கிரமராஜா அவர்கள் அழைத்தபோது, நீங்கள் நிகழ்ச்சிக்கு வந்தால் மட்டும் போதும் என்று அழைத்தார். அவர் எப்போதும் இப்படிதான் செய்வார். அதேபோல தான் இப்போதும் செய்திருக்கிறார். வந்தவுடன் நேராக உள்ளே அழைத்துவந்து மேடையில் உட்கார வைத்து விட்டார். பேசவும் வைத்து விட்டார். அதனால் தான் அதிகமாக என்னால் பேச வாய்ப்பில்லை; நேரமுமில்லை. இருந்தாலும், இன்றைக்கு உங்களது நிகழ்ச்சியில் கலந்து கொண்டதில் உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன். என்னைப் பொறுத்தவரைக்கும், மீண்டும் ஏதாவது கோரிக்கை உள்ளதா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஏனென்றால், எல்லா கோரிக்கையையும் நம்முடைய விக்கிரமராஜா மற்றும் இங்கு இருக்கக்கூடிய நிர்வாகிகளும் அடிக்கடி என்னை சந்தித்து எப்படி பேச வேண்டுமோ, அப்படி பேசி, எப்படி வியாபாரிகள் அந்த வியாபாரத்தை அதிகப்படுத்துவதற்கு பேசி, பேசி அதை சாமர்த்தியமாக வியாபாரம் செய்வார்களோ, அதே போல, அரசிடமும் சாமர்த்தியமாக பேசி, செய்யக்கூடிய ஆற்றல் இங்கே இருக்கக்கூடிய நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் இருக்கிறது. அதிலும் குறிப்பாக விக்கிரமராஜா அவர்கள் எப்போது கோட்டைக்கு வந்தாலும் சரி, ஏதாவது ஒரு காரியத்தை முடித்துவிட்டு தான் செல்வார். அப்படிப்பட்ட ஆற்றலுக்குரியவர்.

அவர் முன்னின்று இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கு என்னை வரவேண்டும் என்று அழைத்து, வரவழைத்திருக்கிறார். அதற்காக மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லி, இங்கே வைத்திருக்கக்கூடிய கோரிக்கையை பொறுத்தவரைக்கும், நிச்சயமாக, உறுதியாக அதுவும் பரிசீலிக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். நாங்கள் சொன்னதைதான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் ஸ்ரீ அதுவும் உங்களுக்குத் தெரியும்.

அந்த உணர்வோடு, அந்த நம்பிக்கையை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து, இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

## பெரியகுளம் ஒன்றிய அஇஅதிமுக சார்பில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் 108வது பிறந்தநாள் பொதுக்கூட்டம்



பெரியகுளம் ஜன 23

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே ஜெயமங்கலம் எம்.ஜி.ஆர் திடலில் பெரியகுளம் ஒன்றிய அஇஅதிமுக சார்பில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் 108வது பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம் பெரியகுளம் (மே) ஒன்றிய கழக செயலாளர் அன்னபிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. பெரியகுளம் (கி) ஒன்றிய செயலாளர் ராஜகுரு, பெரியகுளம் நகர் கழக செயலாளர் பழனியப்பன், தேனி (கி) மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளர் கழகத்தின் போர் வாள் அப்பாஸ் மைதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தேனி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முருக்கோடை இராமர், மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான கழக அமைப்புச் செயலாளர்

செல்வராஜ், தலைமை கழக பேச்சாளர் நல்லாற்று நடராஜன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்வில் முன்னாள் எம்.பி. பார்த்திபன், முன்னாள் எம்.எல்.ஏ. பெரியவீரன், கழக அம்மா பேரவை துணை செயலாளர் ஜெயக்குமார், மதுரை மண்டல தகவல் தொழில் நுட்ப பிரிவு துணை தலைவர் பாலச்சந்தர், மாவட்ட கழக இணைச்செயலாளர் முத்துலட்சுமி, மாவட்ட கழக பொருளாளர் வைகை பாண்டி, மாநில பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி, மாவட்ட இலக்கிய அணி செயலாளர் வழக்கறிஞர் தவமணி, தாமரைக் குளம் முன்னாள் துணை சேர்மன் இராம தண்டபாணி, மாவட்ட மகளிரணி துணை செயலாளர் பாப்பா இளமுருகன், மாவட்ட மகளிரணி துணை செயலாளர் பங்கஜம், மேற்கு ஒன்றிய அவைத்தலைவர் முத்துச்சாமி, மேற்கு ஒன்றிய துணை செயலாளர் செல்லப்பாண்டி, பேரூர் கழக செயலாளர்கள் பாலமுருகன் (வடுகபட்டி), மனோகரன் (தாமரைக்குளம்), தினேஷ் (கெங்குவார்பட்டி) பெரியகுளம் நகர் கழக துணை செயலாளர் வெங்கடேசன், பொருளாளர் கமலகண்ணன், எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் கணேசன், அம்மா பேரவை செயலாளர் ஜெயசீலன் உள்பட கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மதுராந்தகத்தில் மாற்றுத்திறனாளிகள் சார்பில் சமத்துவ பொங்கல் விழா விளையாட்டு போட்டி - சமபந்தி நிகழ்ச்சி



மதுராந்தகம் ஜன 23

மதுராந்தகத்தில் மாற்றுத் திறனாளிகள் சார்பில் சமத்துவ பொங்கல் விழா விளையாட்டு போட்டி மற்றும் சமபந்தி நடை பெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த செல்லியம்மன் கோவில் அருங்குணத்தில் பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளிகள் வெல்பேர் டிரஸ்ட் சார்பில் சமத்துவ பொங்கல் விழா மற்றும் விளையாட்டுப் போட்டிகள் சமபந்தி விருந்து மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி இயக்குனர் பம்மல் B.கவிதா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர் செயல் திறன் நிபுணர் ஜி. கண்ணன், பாலாஜி 5வது வார்டு உறுப்பினர் அருங்குணம், மதுராந்தகம் என்.ஓ.அறக்கட்டளையின் என்.ஓ.பிரித்திவிராஜ், தாம்பரம் சாரதி நினைவு அறக்கட்டளை முதியோர் இல்லம் திரு.பவுல் ராஜ் ஆகியோர் கலந்துகொண்டு மாற்றுத்திறனாளிகளுடன் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடினார்கள்

இந்த நிகழ்ச்சியில் தலைவர் பம்மல் கலா, கௌரவ தலைவர் திரு.அருணகிரி, செயலாளர் எஸ்.தேவி மதுராந்தக கிளை செயலாளர்கள் பாஸ்கர், மாதவன், பாண்டியராஜன், செயற்குழு உறுப்பினர்கள் புஷ்பா மாதவன், வளர்மதி பாஸ்கர், ரமேஷ், குணசேகரன், மோகன், மோகனரங்கன், சௌந்தராஜன், கந்தன், ஜெயக்குமார், கணேஷ் மற்ற கிளை செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் பொங்கல் விழாவில் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## சோழவந்தானில் எம்ஜிஆர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் முன்னாள் அமைச்சர் ஆர் பி உதயகுமார் சிறப்புரை

சோழவந்தான் ஜன 23

மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் சோழவந்தான் தொகுதி வாடிப்பட்டி தெற்கு ஒன்றியம் சோழவந்தானில் முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் 108 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது.



கூட்டத்திற்கு வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் கொரியர் கணேசன் தலைமை தாங்கினார் முன்னாள் எம்எல் ஏக்கள் மாணிக்கம் எம் வி கருப்பையா மகேந்திரன் தமிழரசன் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் அரியூர் ராதா கிருஷ்ணன் முன்னாள் யூனியன் சேர்மன் ராஜேஷ் கண்ணா மாவட்ட கவுன்சிலர் அகிலா ஜெயக்குமார் அம்மா பேரவை விருகை தர்மர் பேரூர் செயலா ளர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் இளைஞர் அணி மாவட்ட இணைச் செயலா ளர் கேபிள் மணி வரவேற்புரை ஆற்றினார் இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் முன்னாள் அமைச் சரும் மதுரை புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர் ஆர் பி உதயகுமார் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார் அதனைத் தொடர்ந்து திண்டுக்கல் முன்னாள் மேயர் மருதராஜ் தலைமை கழக பேச்சாளர் தீப்பொறி முருகேசன் ஆகியோரும் சிறப்புரையாற்றி பேசினார்கள்.

கூட்டத்தில் நிர்வாகிகள் தமிழ்ச்செல்வன் திருப்பதி உஷா வெற்றிவேல் துரை தனராஜன் புளியங்குளம் ராமகிருஷ்ணன் வக்கீல் திருப்பதி சுதாகரன் சுமதி அன்பழகன் எம் வி பி ராஜா கவி காசிமாயன் தமிழழகன் மகேந்திர பாண்டி ராஜாரகு சிங்கராஜ பாண்டியன் சிவசக்தி சாமிநாதன் மகளிர் அணி பஞ்சவர்ணம் லட்சுமி வனிதா சோழவந்தான் முன்னாள் சேர்மன் எம்.கே முருகேசன் மருத்துவர் அணி கருப்பட்டி கருப்பையா பேரூராட்சி கவுன்சி லர்கள் டீக்கடை கணேசன் சண்முக பாண்டியராஜா முன் னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் கருப்பட்டி தங்கபாண்டி தென் கரை இராமலிங்கம் நிர்வாகிகள் பேரூர் துணைச் செயலாளர் தியாகு தெற்கு ரத வீதிசிவா ஜெயபிரகாஷ் துரைக்கண்ணன் பேட்டை மாரி சுரேஷ் வைகை ராஜா பாலா 1வது வார்டு முத்துக் குமார் 2வது வார்டு மருது செது 7வது வார்டு எஸ்பி மணி 10வது வார்டு மணிகண்டன் விவசாய அணி வாவிடமருதூர் ஆர்.பி. குமார் முடுவார்பட்டி ஜெயச்சந்திரமணியன் முத்துக் கிருஷ்ணன் தண்டபாணி விஜய பாபு சக்திவேல் அப்பாச்சி கண்ணன் ஜூஸ் கடை கென்னடி மன்னாடிமங்கலம் ராஜாபாண்டி கல்லாங்காடு ராமு குருவித் துறை விஜயபாபு காசிநாதன் கச்சிராயிருப்பு முனியாண்டி மேலக்கால் காசிலிங்கம் திரு வேடகம் மணி என்ற பெரியசாமி சோழவந்தான் சரத் அண்ணா தொழிற்சங்கம் சின்னன் சக்திவேல் பாண்டி உள்பட பலர் கலந்து கொண்டனர். பேரூராட்சி கவுன்சிலர் ரேகா ராமச்சந்திரன் நன்றி கூறினார்.

## தாம்பரம் மாநகராட்சி கடப்பேரியில் உள்ள புத்தேரி எனப்படும் கடப்பேரி ஏரியை மீட்டுருவாக்கம் செய்யும் சமூகப்பணி

ாம்பரம், ஜன.23

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் கடப்பேரியில் நீர் வளங்களை பாதுகாக்கின்ற வகையில் கடப்பேரி ஏரியை தூய்மை படுத்தி அதனை பாதுகாக்கின்ற வகையில் சென்னை ரோட்டரி கிளப் மெட்ராஸ் Rotary Club Of Madras எக்ஸ்னோரா சர்வதேச அமைப்பு தமிழ்நாடு அரசு நீர்வளத்துறை மற்றும் சமூக அமைப்புகளுடன், தாம்பரம் மாநகராட்சியும் இணைந்து கடப்பேரியில் உள்ள புத்தேரி எனப்படும் கடப்பேரி ஏரியை மீட்டுருவாக்கம் செய்யும் சமூகப்பணி நடைபெற்றது



இந்த விழாவில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு. எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ அவர்கள் கலந்து கொண்டு மேற்படி பணியினை குத்து விளக்கு ஏற்றி வைத்து துவக்கி வைத்தனர் இந் நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் எல்.பெரியநாயகம், வட்ட செயலாளர் வினோத், வட்ட நிர்வாகிகள், மற்றும்

மாநகராட்சி அதிகாரிகள், நீர்வளத்துறை அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சென்னை பெனாங்கு இடையே நேரடி விமான சேவை இந்தியா பெனாங்கு இடையே உறவுகளை வலுப்படுத்தும் விமான சேவை

மதுரை: ஜன 23

பெனாங்கு மாநாடு மற்றும் கண்காட்சி துறை அமைப்பு சென்னை பெனாங்கு இடை யிலான இன்டிகோவின் நேரடி விமான சேவையின் வெற்றிகரமான துவக்கத்தை கொண்டாடுவதில் மகிழ்ச்சி அடைகிறது. 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதி முதல் செயல்பட்டு தொடங்கிய இந்த புதிய வழித்தடம், இந்தியாவுக்கும் பெனாங்கிற்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் முக்கிய முன்னேற்றமாகும்.




இந்தியாவையும் பெனாங்கையும் இணைக்கும் ஒட்டுமொத்த முயற்சியின் ஒரு பகுதியாக, சென்னை பெனாங்கு நேரடி சேவைக்கு கூடுதலாக, மதுரை சென்னை பெனாங்கு இணைப்புசேவையும் இண்டிகோ மூலம் செயல்பட உள்ளது. பயணிகள் ரூ.12,300 முதல் தொடங்கும் ஒருவழி கட்டணம் மற்றும் 30 கிலோ லக்கேஜ் அனுமதியுடன் பயணிக்கலாம், இதுவணிகப் பயணிகளுக்கு சிறந்த வாய்ப்பாகும்.2017 முதல், இந்தியாவில் பெனாங்கின் முக்கியத்துவத்தை உயர்த்துவதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. பெனாங்கு சாலையோரம் என்ற நிகழ்ச்சியின் அறிமுகத்துடன் தொடங்கிய இந்த முயற்சி, இந்தியாவின் முக்கிய நகரங்களில் பெனாங்கின் தனித்துவமான கலாச்சாரம், தொழில்துறை வாய்ப்புகள் மற்றும் சுற்றுலா அம்சங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. இந்த முயற்சியின் எட்டாவது பதிப்பாக 2025 நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

சென்னைபெனாங்கு நேரடி சேவையின் அறிமுகத்துடன், பெனாங்கின் சர்வதேச விமான இணைப்புகள் 19 ஆக உயர்ந்துள்ளது. இதில் பேங்காக், ஹாங்காங், சிங்கப்பூர், ஜகார்த்தா, துபாய், ஷாங்காய், டோகா உள்ளிட்ட முக்கிய நகரங்கள் உள்ளன. இந்த வழித்தடங்கள், பெனாங்கை தெற்காசியாவில் முக்கிய பயண மையமாகவும் வணிகத்திற்கான நடுப்புள்ளியாகவும் மாற்றுகின்றன.

பெனாங்கு மாநாடு மற்றும் கண்காட்சி துறை அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரி அஷ்வின் குணசேகரன் கூறுகையில், தனது மகிழ்ச்சியை "சென்னை பெனாங்கு நேரடி விமான சேவை, எங்கள் நீண்டகால உழைப்பின் வெற்றிகரமான முடிவாகும். இந்த புதிய சேவை இந்திய வணிக நிறுவனங்களுக்கும் பயணிகளுக்கும் அனுகூலமாக இருக்கும். இந்த விமான சேவை பெனாங்கின் பண்பாடு, பாரம்பரியம் மற்றும் வணிக வாய்ப்புகளை அனுபவிக்க விரும்பும் பயணிகளுக்கு மிகுந்த வசதியாக இருக்கும். நிச்சியமாக இந்த சேவை பெனாங்கின் மாபெரும் வணிக நிகழ்வுகளுக்கான தளத்தை வலுப்படுத்தும் என நம்புகிறது, என்றார்.

## கரூர் மாவட்ட வர்த்தகம் மற்றும் தொழில் கழகம் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு இணைந்து நடத்தும் 32வது மகாசபை கூட்டம்

கரூர், ஜன.23

கரூர் மாவட்ட வர்த்தகம் மற்றும் தொழில் கழகம் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேர மைப்பு இணைந்து நடத்தும் 32வது மகாசபை கூட்டம் ஹோட்டல் ஹேமலாவில் தலைவர் ராஜூ தலைமையில் நடைபெற்றது.




செயலாளர் LIONK.S.வெங்கட் ராமன் ஆண்டு அறிக்கை வாசிக் கப்பட்டு சங்கத்தின் செயல்பாடு குறித்து விளக்கிப் பேசினார்.

மாவட்டத் துணைத் தலைவர் வி.பால்ராஜ் அவர்கள் 20232024 ஆண்டுக்கான வரவு செலவு கணக்குகள் தாக்கல் செய்யப் பட்டு சரிபார்க்கப்பட்டு அனைவ ராலும் ஒப்புதல் பெறப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மாநில துணைத்தலைவர் V.R.கந்தசாமி, மாநில இணை செயலாளர் ராஜேந்திரன், P.செல்வம் ஆகி யோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப் பின் மாநில தலைவர் டாக்டர் A.M.விக்ரமராஜா மே5 அன்று 42வது மாநில மாநாடு சென்னை யில் நடத்துவது குறித்தும் தற் சமயத்தில் வணிகர்கள் பிரச் சனைகள் பற்றியும் சிறப்புரை ஆற்றினார். சந்திக்கும் நடை பெற்ற கூட்டத்தில் சிறப்பு விருந் தினர்களாக மாநில பொதுச் செயலாளர் Ve.கோவிந்த ராஜுலு, மாநில பொருளாளர் A.M.சதக்கத்துல்லா, மாநில தலைமை செயலாளர் பேராசி ரியர் R.ராஜ்குமார், மாநில செய்தி தொடர்பாளர் P.பாண்டிய ராஜன், மாநில கூடுதல் செய லாளர் V.P.மணி, திண்டுக்கல் மண்டல தலைவர் D.கிருபா கரன், திண்டுக்கல் மாவட்ட செயலாளர் S.நசீர்சேட், திண்டுக் கல் மாவட்ட பொருளாளர் S. கருணாகரன் ஆகியோர்கள் வணிகர்கள் சந்திக்கும் பிரச்ச னைகள் குறித்து பேசினார்கள்.

உறுப்பினர்களின் மேலான கருத்துக்கள் கேட்கப்பட்டது கரூர் மாவட்டத்திலிருந்து அனைத்து சங்கத்தின் தலை வர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் துணை நிர்வாகிகள் கலந்து கொண்டு நல்ல பல கருத்துக்களை தெரி வித்தனர் இறுதியில் ராஜாமணி S.பழனிச்சாமி நன்றி கூறினார்.

தமிழக அரசால் கடந்த 2016 ஆம் ஆண்டில் உள்ளாட்சி வாடகை கடைகளுக்கு பல மடங்கு வாடகைகள் உயர்த்தப் பட்டது இது கடந்த 06.08.2023 அன்று மக்கள் நலன் காக்கும் தமிழக அரசு 66(2ப) அரசாணை ஒன்றை பிறப்பித்துள்ளது. மேற்படி அரசாணை எண் 66(2ப)ன்படி அந்த அந்த மாநக ராட்சிகளில் உள்ள மாவட்ட வணிக சங்க பிரதிநிதிகள் மற்றும் மாநகராட்சியை சார்ந்த அதிகாரிகள் அடங்கிய ஒரு வழிகாட்டுதல் குழு அமைத்து மேற்கண்ட பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது. ஆகவே அரசாணை எண் 66(2)ஐ கரூர் மாநகராட்சி விரைந்து அமுல்படுத்த உள்ளாட்சிக் கடை களின் வாடகை பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணுமாறு ஏகமன தாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது

## ஆத்தூர் வருவாய் வட்டத்தில் "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு





திண்டுக்கல், ஜன.23

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வருவாய் வட்டத்தில் "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித்தலைவர் மொ. நா.பூங்கொடி, பல்வேறு பகுதி களில் ஆய்வு மேற்கொண்டு, ஆத்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் துறை அலுவ லர்களுடன் ஆய்வு மேற் கொண்டார்.

ஆத்தூர் வட்டம், சீவல்சரகு ஊராட்சி ஆதிலட்சுமிபுரத்தில் அங்கன்வாடி மையம், எஸ்.பாறைப்பட்டியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆகிய இடங்களில் ஆய்வுமேற் கொண்டார். பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளிடம் பாடங் கள் தொடர்பாக விளக்கங்கள் கேட்டு, மாணவ, மாணவிகளின் கற்றல் அடைவு மற்றும் வாசிப்புத் திறன் குறித்தும், இடைநின்ற மாணவ, மாணவிகள் எவரேனும் உள்ளனரா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் பயன்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டார். மாணவ, மாணவிகளிடம் காலை உணவு மற்றும் மதிய உணவின் தரம் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் சமையல் கூடத்தில் மதிய உணவு தயார் செய்யும் பணியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பள்ளி வளாகத்தில் குப்பைகள் அகற் றப்பட்டு சுத்தமாக பராமரிக் கப்பட்டுள்ளதா, சுகாதாரமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதா, வகுப் பறைகள் தூசு இல்லாமல் சுத்தமாக உள்ளதா, கழிப் பறைகள் சுகாதாரமாக பராமரிக் கப்படுகிறதா என்பதை பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் ஆத்தூரில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் செயல்படும் மாணவர் விடுதி மற்றும் மாணவிகள் விடுதி ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்த தாவது:

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சதீஸ்பாபு, திண் டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் இரா.சக்திவேல், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) கங்காதேவி, ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் தட்சணாமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் தனிஎழுத்தர் (கல்வி) அ.சரவணக்குமார் மற்றும் அனைத்துத் துறை உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் கடற்பாசி வளர்ப்போர் மற்றும் உற்பத்தியாளர்கள் நிறுவனங்கள் அமைப்பதற்கான கருத்தரங்கு கூட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் துவக்கி வைத்து உரையாற்றினார்.




புதிதாக பாஜக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் என்.ரகுராமன் அவர்களை முன்னாள் மாவட்ட செயலாளர் தாம்பரம் முனைவர் கோபி நேரில் சந்தித்து சால்வை அணிவித்து கேக் வெட்டி வாழ்த்துக்கள் தெரி வித்தனர் உடன் முன்னாள் எஸ்சி அணி மாவட்ட செயலாளர் பி.சீனிவாசன், முன்னாள் கிழக்கு தாம்பரம் மண்டல் பொதுச்செயலாளர் கே.நடராஜன் மற்றும் முன்னாள் மாடம்பாக்கம் மண்டல் தலைவர் ஜி.செந்தில்வேல் ஆகியோர் ஆகியோர் கலந்து கொண்டு மாவட்ட தலைவருக்கு கேக் வெட்டி வாழ்த்துக்கள் கூறினார்கள்.

## தேனியில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி, ஜன.23

தேனி மாவட்டத்தில் விவசா யிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 24.01.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி. ஷஜீவனா, தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ளது.



இக்கூட்டத்தில், வேளாண்மை மற்றும் சகோதரத்துறையால் சமீபத்திய வேளாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைக்கப்படவுள்ளது. எனவே, தேனி மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளா ண்மை மற்றும் உழவர் நலத் துறைகள் சம்பந்தமான திட்டங் கள் குறித்த கோரிக்கைகளை விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் மனுக் களாக வழங்கலாம்.

விவசாயிகளிடமிருந்து பெறப் படும் மனுக்கள், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி, அதன்மீது தனி கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, விவசா யிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், இக்கூட்டத் தில் கலந்து கொண்டு பயனடை யலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, தெரிவித்துள்ளார்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 2025ஐ முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பி.பெ.அக்ரஹாரம், ராஜாஜிபுரம், வளையகாரவீதி, அக்ரஹார வீதி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிய முதலமைச்சர்

சிவகங்கை, ஜன.23

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிவகங்கை அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக சிவகங்கை மாவட்டம், காரைக்குடிக்கு வருகை தந்தார். அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம் அவர்களின் சொந்த நிதியில் 12 கோடி ரூபாய் செலவில் அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் மற்றும் அழகப்பா பல்கலைக் கழக முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்பில் 5 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை ஆகியவற்றை திறந்து வைத்தார்.






அதனைத் தொடர்ந்து, நேற்று மாலை காரைக்குடி, அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, மாணவிகளிடம் விடுதியில் வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், விடுதியில் உள்ள வசதிகள் குறித்தும், அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர், முதலமைச்சர் தலைமையில், சிவகங்கை மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப்பேரவை மானியக் கோரிக் கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் (22.1.2025) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஒக்கூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமிற்கு நேரில் சென்று, அங்கு தங்கியுள்ள இலங்கை தமிழர்களிடம் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், அவர்களது தேவை கள் குறித்தும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சிவகங்கையில் நடைபெற்ற அரசு விழாவில், 51 கோடியே 37 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் 46 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 164 கோடியே 1 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 53,039 பயனா ளிகளுக்கு 161 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சிவகங்கை மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப் பணிகளின் விவரங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் உரத்துப்பட்டி ஊராட்சி, கிழவயல் ஊராட்சிமணியாரம் பட்டி, உலகம்பட்டி ஊராட்சி, குன்னத்தூர் ஊராட்சி ஆகிய இடங்களில் 49 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடங்கள்;

பிரான்பட்டி, சிங்கம்புணரி, மறமங்கலம், மருதங்கநல்லூர், நெஞ்சத்தூர், கங்கனி ஊராட்சி - உலக்குடி, திருப்பாச்சேத்தி ஊராட்சி - திருப்பாச்சேத்தி தெற்கு, கீழடி ஊராட்சி - பசியாபுரம், கானூர் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளில் 3 கோடியே 36 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள்;

வாரப்பூர் ஊராட்சி - குரும்பலூரில் 25 இலட்சம் ரூபாய் செலவில் சமுதாயக்கூடம், புழுதிப் பட்டி ஊராட்சி - மீனாட்சிபுரம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் - நெற்குப்பை, கல்லல் ஊராட்சி ஒன்றியம் - அ. சிறுவயல் ஊராட்சி, கண்ணங்குடி ஊராட்சி ஆகிய இடங்களில்

2 கோடியே 73 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சுகாதார நிலையக் கட்டடங்கள்;

தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம் - நாச்சான்குளம் ஊராட்சி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் - மேலப்பசலை ஊராட்சி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் - தெற்கு சந்தனூர் ஊராட்சி ஆகிய இடங்களில்

1 கோடியே 27 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி செயலகக் கட்டடங்கள்;



தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம் - திருவேகம்பத்தூர் ஊராட்சியில்

9 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சுயஉதவிக் குழுக்களுக்கான பணிமனை, கண்ணங்குடி ஊராட்சியில் 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோ லொகேஷன் சென்டர், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், வீரனேந்தல் ஊராட்சி - கிடாக்குழி கிராமத்தில் 13 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி சேவை மையக் கட்டடம்;

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கொந்தகை ஊராட்சி - கட்டமன்கோட்டை கிராமம், ஓடாத்தூர் ஊராட்சி ஆகிய இடங்களில் 18 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள பொது விநியோகக் கடைகள், கல்லல் ஊராட்சி ஒன்றியம், கீழப்பட்டமங்கலம் ஊராட்சி - பெரிச்சிக்கோவில் முதல் தெற்கு நைனார்ப்பட்டி சாலை, சுண்ணாம்பிருப்பு வரத்துக் கால்வாயில் 4 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், மாரந்தை ஊராட்சி - கோரவலசை சாலை மாரந்தை கால்வாயில்

1 கோடியே 69 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள பாலம், மாரந்தை ஊராட்சிதளிர்தலை கிராமம், கோரவலசை சாலைமாரந்தை கால்வாயில் 3 கோடியே 27 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கீழடி ஊராட்சி, அருங்காட்சியகம் அருகில் ரூபாய் 24 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புற சோதனை சாவடி கட்டிடம் என 17 கோடியே 84 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகள்;

என மொத்தம் 164 கோடியே 1 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் 985 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மூன்று சக்கர சைக்கிள்கள், திறன்பேசிகள், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், மடக்கு சக்கர நாற் காலிகள், காதொலிக்கருவிகள், மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப் பட்டோருக்கான சிறப்பு நாற்காலிகள், கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 20,036 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 5512 பயனாளிகளுக்கு உதவித்தொகை, நலிந்தோர் உதவித் தொகை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 725 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 53,039 பயனாளிகளுக்கு 161 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கினார்.

இந்த விழாவில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி, எஸ்.மாங்குடி, காதர்பாட்சா முத்துராமலிங்கம், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், உள்ளாட்சி அமைப்புக் களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆய்வு

கன்னியாகுமரி, ஜன.23

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட் பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிதிட்டப்பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஹனீஷ் சாப்ரா, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற் கொண்டு தெரிவிக்கையில்





தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத் தப்பட்டது. அதனடிப்படையில் லீபுரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் 20242025 திட்டத்தின் கீழ் ரூ.3.10 இலட்சம் மதிப்பில் கட்டிமுடிக்கப்பட்டு, வெள்ளையடிக்கப்பட்டு வரும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற் கொள்ளப்பட்டதோடு, வீட்டு உரிமையாளரிடம் கலந்துரையாடப்பட்டது.

மேலும் முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.15.32 இலட்சம் மதிப்பில் லீபுரம் முதல் கல்லுவிளை ஊராட்சி அலுவலக சாலையை விரிவாக்கி, தார்சாலை அமைக் கப்பட்டுள்ளதையும், இத்தார் சாலையின் தரம் ஆய்வு செய்யப் பட்டதோடு, விளக்கம் கேட்டறியப்பட்டதோடு, சாலையின் அளவு சரியாக உள்ளதா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ரூ.9.93 இலட்சம் மதிப்பில் கிருஷ்ணன் புதூர் தெப்பக்குளம் முதல் ஆமணக்கன்விளை 3வது மடை தூர்வாரும் பணி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப் பட்டதோடு, இத்தொப்பக் குளத்தினை முறையாக பராமரித்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது. அதனைத்தொடர்ந்து ஆமணக்கன்விளை அரசு தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்ட செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டதோடு, இருப்பு பொருட்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து பெருமாள்புரம் இலங்கைவாழ் தமிழர் முகாம் களில் வாழும் இலங்கை தமிழர் களின் குடும்பத்தினர் பயன் பெறும் வகையில் ரூ.6.06 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள வீடுகளின் கட்டமைப்புகள், கழிப்பறை, மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப் படை வசதிகள் ஆய்வு மேற்கொள் ளப்பட்டதோடு, கட்டுமான பணிகளின் தரம் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் கேட்டறியப்பட்டது. சாலையை விரிவாக்கி, இப்பணிகளை விரைந்து முடித்து இலங்கை வாழ் தமிழர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது.

மேலும் கன்னியாகுமரி விவேகனாந்தர் பாறை முதல் அய்யன் திருவள்ளுவர் சிலையை இணைத்து கண்ணாடி இழை தரைத்தளம் பாலம் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்ததைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகளுக்கு தேவையான கழிப்பறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கப்பட் டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு மற்றும் கண்ணாடி இழை தரைத்தளபாலத்தின் உறுதி தன்மை உள்ளிட்டவைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டதோடு, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினை உறுதி செய்திட துறை சார்ந்த அலுவலர்களுக்க அறிவுறுத்தப் பட்டது. இவ்வாறு கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஹனீஷ் சாப்ரா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாபு, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, உதவி ஆட்சியர் (பயிற்சி) சுஷ்ரீ சுவாங்கி குந்தியா, நாகர்கோவில் வருவாய்கோட்டாட்சியர் செல்வி. எஸ்.காளீஸ்வரி, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் முருகன், நெடுஞ்சாலைத்துறை கோட்ட செயற்பொறியாளர் சத்திய மூர்த்தி, துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண் டார்கள்.

## தேனி மாவட்ட கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்

தேனி, ஜன.23

தேனி மாவட்டம், நாடார் சரஸ்வதி கலை அறிவியல் கல்லூரியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் சார்பில் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்றமைக்கு தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் வா.சம்பத் முன்னிலையில் வழங்கினார்கள்.




இந்நிகழ்வில் தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.ராமகிருஷ்ணன் (கம்பம்), கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் (மதுரை) க.முனுசாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளிக்கல்வித்துறைக்கு இணையாக கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறார்கள்.

கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் மாணவர்கள் 100 % தேர்ச்சி பெற செய்து சிறப்பான இடத்தை பெற செய்த தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுகளை தெரி வித்துக்கொள்கிறேன்.

தேனி, மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் 295 அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் 4 உண்டு உறைவிடப்பள்ளிகள் 55 விடுதிகள் இத்துறையின் கீழ் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மதுரை, தேனி, திண்டுக்கல் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளின் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில், 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 96% தேர்ச்சியும், 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 92% தேர்ச்சியும் பெற்றிருப்பதை 100% உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில், கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சியை பெற்று பிற பள்ளிகளுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது.

கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 100% தேர்ச்சி என்பது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் அயராத உழைப்பிற்கு கிடைத்த வெற்றியாக கருதப்படுகிறது. ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் என கேட்ட தாய் என்ற வள்ளுவரின் கூற்றுப்படி, மாணவர்களை 100% தேர்ச்சி பெற செய்து பெருமகிழ்ச்சியில் உள்ள தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரி வித்துக்கொள்கிறேன் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

மதுரை மண்டலத்திற்குட்பட்ட கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 20232024 கல்வியாண்டில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 95% க்கு மேல் தேர்ச்சி பெற்ற 58 பள்ளியின் தலைமை ஆசிரியர்களுக்கு தலா ரூ.10,000/ பரிசுத்தொகையும், ஒவ்வொரு பாடப்பிரிவிலும் மாணவ, மாணவியர்களை 100% தேர்ச்சி பெறச் செய்த 587 பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5000/ பரிசுத்தொகைக்கான காசோலைகள் மற்றும் 100% தேர்ச்சி பெறச்செய்த 29 தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயத்தினை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் தேனி அல்லிநகரம் நகர்மன்றத் தலைவர் ரேணுபிரியா பாலமுருகன், துணைத்தலைவர் செல்வம், திட்டக்குழு உறுப்பினர் நாராயண பாண்டி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அபிதா ஹனீப், துணை இயக்குநர் (மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம்) ரமணகோபால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் வெங்கடாச்சலம், முதன்மை கல்வி அலுவலர் இந்திராணி மற்றும் பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மக்களை நாடி அவர்களின் குறைகளைத் தீர்க்க தமிழ்நாடு அரசின் உன்னத திட்டமான "உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வட்டம் கோமநேரி குளத்தில் கட்டப்பட்டுள்ள தடுப்பணையினை மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத் பார்வையிட்டார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161